கிராமின் கிருஷி மவுசம் சேவா
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 22-08-2023**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-08-22 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-08-23 | 2023-08-24 | 2023-08-25 | 2023-08-26 | 2023-08-27 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 8.0 | 2.0 | 0.0 | 2.0 | 6.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 37.0 | 36.0 | 36.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 28.0 | 27.0 | 26.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 70 | 70 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 16 | 14 | 12 | 14 | 14 |
| காற்றின் திசை (கோணம்) | 180 | 200 | 180 | 200 | 200 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 6 | 7 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரங்களில் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஒரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 70-80% ஆகவும், பகல் நேரங்களில் 40% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35.0-37.0 °C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25.0-28.0 °C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 12-16 கி.மீ ஆக வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

27.08.2023 முதல் 02.09.2023 வரை தமிழ்நாட்டில் மழை, குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பாக காணப்படும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| தற்பொழுது நிலவும் வானிலையை பயன்படுத்தி சம்பா நெல் பயிரிட வயல்களை உழவு செய்து தயார் செய்யவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைப்பேன் தாக்கம் தென்படவாய்ப்புள்ளது. இலைப்பேன் தாக்கிய இளம்பயிர்களின் இலைகள் சுருண்டு நிறம்மாறி காணப்படும். நாற்றுக்களின் இலைகளில் மஞ்சள் நிறகோடுகள் காணப்படும். இதன் அறிகுறிகள் நாற்று பருவத்திலும், நடவு வயலிலும் காணப்படும். இலைப்பேன் தாக்கம் அதிகமாகும் போது இலைகள் வெள்ளை நிறத்தில் மாறிவிடும். நாற்று வயலில் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த 20 சென்ட் நாற்றங்காலுக்கு தயாமீதாக்ஷம் 8.0 கிராம் வீதம் தெளிக்க வேண்டும். நடவுவயலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசாடிராக்டின் 400 மிலி (10000 பி.பி.எம்) அல்லது தயாமீதாக்ஷம் 40 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். |
| நெல் | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி/ ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும். |
| கரும்பு | கரும்பில் குருத்து மாவுப்பூச்சி மற்றும் போக்க போயிங் நோய் தாக்குதல் கரும்பு பயிரில் அதிகளவில் காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் வளரச்சி குன்றி, குருத்து காய்ந்து, இலைகள் மஞ்சள் நிறமாகவும் மற்றும் கரும்புகள் வலுகுன்றியும் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகளை பின்பற்ற வேண்டும். 1. கரணைகளை கார்பன்டசிம் 50 % WP ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு கிராம் என்ற அளவில் 30 நிமிடங்கள் நனைத்த பின், இமிடாகுளோபிரிட் 70 % WS லிட்டருக்கு 1.5 மிலி என்ற அளவில் 5 நிமிடம் வரை நனைக்கவும். 2. வயல்களின் ஓரங்களில் எறும்பின் நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும். 3. வரும்முன் காக்கும் முறையாக வயல் ஓரங்களில் மூன்று வரிசை வரை இமிடாகுளோபிரிட் 17.8 SL 3.0 மில்லி/10 லிட்டர் அல்லது குளோரன்ட்ரானிலிப்ரோல் 18.5 SC 4.0மில்லி/ 10 லிட்டர் அல்லது குளோதையானிடின் 50% WDG 5.0 கிராம்/ 10 லிட்டர் அல்லது ஸ்பைரோடெட்ராமெட் 150 OD 12.5 மில்லி/ 10 லிட்டர் அல்லது புளோனிகாமிட் 50 WG 3.0 கிராம்/ 10 லிட்டர் தெளிக்க வேண்டும். 4. குருத்து மாவுப்பூச்சி 10 சதம் பொருளாதார சேதநிலையைத் தாண்டும் பொழுது 20 நாட்களுக்கு ஒருமுறை மேலே குறிப்பிட்ட பூச்சிக்கொல்லிகளை சுழற்சி முறையில் ஒட்டும் திரவம் ஒரு மில்லி/ லிட்டர் என்ற அளவில் சேர்த்து தெளிக்க வேண்டும். 5. போக்க போயிங் நோய்க்கு கார்பன்டசிம் 50% WP 2.0 கிராம்/லிட்டர் அல்லது புரோபிகொனோசோல் 25% EC 2.0 மில்லி/லிட்டர் என்ற அளவில் ஒட்டும் திரவம் 1.0 மில்லி/லிட்டர் என்ற அளவில் சேர்த்து இருபது நாளைக்கு ஒரு முறை வீதம் மூன்று முறை தெளிக்க வேண்டும். 6. பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதற்கு முன்பு சோகைகளை நீக்கி இருக்க வேண்டும். 7. இரண்டு முறைக்கு மேல்மறுதாம்பு விடுவதை முடிந்த அளவு தவிர்க்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | இலேசான மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 12-16 கிலோ மீட்டராக வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்கள் முறிய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் ஐந்து மற்றும் ஐந்து வயதிற்கு அதிகமாக இருக்கும் மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | தற்போது நிலவும் வானிலையால் கால்நடைகள் நாவறட்சியால் அதிக தண்ணீர் அருந்த வாய்ப்புள்ளது. எனவே போதுமான அளவு சுத்தமான குடிநீரை கால்நடைகளுக்கு வழங்கவும். கறவை மற்றும் உழவு மாடுகளில் வாய் மற்றும் கால் குழம்புகளை கோமாரி நோய்க்காக பரிசோதனை செய்யவும். |